## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண் 15
## 2026, ஆகஸ்ட் 19, புதன்கிழமை
## ஆவணி 02, திருவள்ளுவர் ஆண்டு – 2057

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

**"நீர்இன்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு."**

(எத்தனை பெரியவரானாலும் நீர் இல்லாமல் வாழமுடியாது; அந்த நீரோ மழை இல்லாமல் கிடைக்காது.)

1. **பேரவை விதி 110–இன் கீழ் அறிக்கை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–இன் கீழ் மூன்று அறிக்கையினை பேரவைக்கு அளித்தார்கள்.

**(i) பால் கொள்முதல் விலை உயர்வு குறித்து:–**

உலகில் தான் உற்பத்தி செய்யும் பாலை தனது சந்ததிகளுக்கு மட்டுமின்றி, மனிதர்கள் உள்ளிட்ட பிற ஜீவராசிகளுக்கும் வழங்கி உயிரைக் காக்கும் பசுவை தெய்வமாகப் போற்றி வளர்த்து வருவது நமது பாரம்பரியத்தின் சிறப்பு. இன்றைய அறிவியல் உலகில், ஒரு லிட்டர் பாலை உற்பத்தி செய்வதற்காக பசுவின் உடலில் சுமார் 500 லிட்டர் இரத்தம் சுத்திகரிக்கப்படுவதாக கூறப்படும்போது, பசுவின் உழைப்பை எண்ணி வியக்கத் தோன்றுகிறது.

தமிழ்நாட்டில் 8,800 பால் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 3,16,000 பால் உற்பத்தியாளர்களிடமிருந்து, தினசரி 34 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, ஆவின் நிறுவனத்தின் மூலம் நாளொன்றுக்கு 31 இலட்சம் லிட்டர் பால் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது 4.3 சதவிகிதம் கொழுப்புச் சத்து மற்றும் 8.2 சதவிகிதம் இதர சத்துகள் அடங்கிய ஒரு லிட்டர் பாலுக்கு கொள்முதல் விலையாக 35 ரூபாயும், மாநில ஊக்கத்தொகையாக ஒரு லிட்டர் பாலுக்கு 3 ரூபாயும், ஆக மொத்தம் ஒரு லிட்டருக்கு கொள்முதல் விலை 38 ரூபாய், 5–11–2022 முதல் வழங்கப்பட்டு வருகிறது. அதிகாலை 3.00 மணிக்கே எழுந்து, மாடுகளை சுத்தம் செய்து, பால் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களின் உழைப்பையும், தீவனம் மற்றும் வேலையாட்களின் கூலி உள்ளிட்ட அதிகரித்துவரும் செலவுகளையும், கடந்த கால அரசு போதிய அளவில் கருத்தில் கொள்ளவில்லை. உற்பத்தியாளர்களுக்குக் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் கொஞ்சம்கூட இல்லாமல் இருந்துள்ளது. கடந்த காலத்தில் கொள்முதல் விலை உரிய அளவில் உயர்த்தப்படாத நிலையில், நம் அரசு சந்தித்துவரும் அதிகப்படியான நிதி நெருக்கடியிலும், பால் உற்பத்தியாளர்களின் நலனையும் வாழ்வாதாரத்தையும் கருத்தில்கொண்டு, அவர்களின் உன்னதமான உழைப்பிற்கு உரிய மதிப்பை வழங்கும் வகையில், கொள்முதல் விலையை உயர்த்துவது நமது அரசின் கடமையாகும்.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் வழங்கும் 3,16,000–க்கும் மேலான பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில், பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு கூட்டுறவு சங்கம் மூலமாக ஒரு ரூபாய் உயர்த்தவும், மேலும் அரசு ஊக்கத் தொகையை 3 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக உயர்த்தவும், ஆக மொத்தம் ஒரு லிட்டர் கொள்முதல் விலையை 38 ரூபாயிலிருந்து 41 ரூபாயாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இந்தக் கொள்முதல் விலை உயர்வால், கூடுதலாக ஒரு மாதத்திற்கு ரூ.30 கோடியும், ஓர் ஆண்டிற்கு ரூ.360 கோடியும் செலவாகும்.

...2

(ii) <u>மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை தொடர்பாக:–</u>

ஓர் உயிரின் மதிப்பை அவரது வருமானம் தீர்மானிக்கக் கூடாது. வசதி படைத்தவர், வசதி குறைவானவர் என்ற நிலை மருத்துவத் துறையில் இருக்கக்கூடாது. அனைவருக்கும் சமமான மருத்துவச் சேவை எளிதாகக் கிடைக்க வேண்டுமென்பதில் நமது அரசு உறுதியாக உள்ளது. மருத்துவம் என்பது சலுகை அல்ல, ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை. ஒரு மனிதனின் உயிரைக் காப்பாற்றுவதில் தாமதமாகும் ஒவ்வொரு நொடியும் மிகக்கொடியது. மருத்துவத்தைத் தேடிவரும் மக்களின் பாதையில் இருக்கும் தடைகளான வறுமை, தொலைவு, மருத்துவர் பற்றாக்குறை, மருந்துகளின் விலை, மருத்துவ விழிப்புணர்வு இல்லாமை, காத்திருப்பு, அவசரகால வசதியின்மை போன்றவற்றைப் படிப்படியாக அகற்றி, ஏழை–பணக்காரர், கிராமம்–நகரம் என்ற பாகுபாடின்றி, ஒவ்வொருவருக்கும் தரமான மற்றும் எளிதான மருத்துவச் சேவை கிடைக்கச் செய்வதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு, செயல்பட்டு வருகிறது நமது அரசு.

(i) வடசென்னை மக்களுக்கு உயர்தர மருத்துவ சேவை எளிதில் கிடைக்கும் வகையில், பெரம்பூரில் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் 400 படுக்கைகள் கொண்ட உலகத் தரத்திலான பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும்.

(ii) முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் இலவச மருத்துவ சிகிச்சைக்கான மருத்துவக் காப்பீட்டுத் தொகை ஆண்டொன்றுக்கு, தற்போதுள்ள ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்தப்படும்.

திருநங்கையர்களுக்கான மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை சேவைகள் கூடுதலாக, சென்னை ஸ்டான்லி, திருநெல்வேலி, தூத்துக்குடி, செங்கல்பட்டு, திருவாரூர், தருமபுரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

(iii) தமிழ்நாட்டில் 2014 ஆம் ஆண்டிற்குப் பிறகு, புதிய அரசு செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படாத நிலையில், தரமான மருத்துவ சேவைக்குத் தேவையான செவிலியர், மருந்தியல் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்களை உருவாக்கும் வகையில், அரசு மருத்துவக் கல்லூரிகளில் ரூ.351 கோடி மதிப்பீட்டில் கூடுதல் மாணவர் சேர்க்கை இடங்கள் உருவாக்கப்படும். 7 புதிய அரசு செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, 660 BSc Nursing மாணாக்கர் இடங்கள் உருவாக்கப்பட்டு, ஏற்கெனவே உள்ள செவிலியர் கல்லூரிகள் மற்றும் செவிலியர் பள்ளிகளில் கூடுதலாக 1,925 கூடுதல் மாணாக்கர் இடங்கள் இயன்முறை மருத்துவம் உள்ளிட்ட 12 துணை மருத்துவ படிப்புகளில் 2,778 மாணாக்கர் இடங்கள் மருந்தியல் படிப்புகளில் 735 கூடுதல் இடங்கள் என மொத்தமாக சுமார் 6,098 கூடுதல் மாணாக்கர் இடங்கள் உருவாக்கப்படும்.

(iv) தமிழ்நாட்டில் அதிகரித்துவரும் புற்றுநோய்களைத் தடுக்கவும், தரமான சிகிச்சை வழங்கவும், முதலமைச்சரின் புற்றுநோய் பராமரிப்பு இயக்கம் (Chief Minister's Cancer Care Mission) 673 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். சென்னை ராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனையில் 471 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் G+14 தளங்களுடன் ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும். மேலும், 5 மண்டல புற்றுநோய் மையங்கள் (Regional Cancer Care Centres) தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நிறுவப்படும். முதற்கட்டமாக, மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் ரூ.84 கோடி செலவில் G+8 தளங்களுடன், மண்டல புற்றுநோய் மையம் தொடங்கப்படும். Robotic அறுவை சிகிச்சை, Linear Accelerator (LINAC) கதிர்வீச்சு, நவீன கருவிகள், இலக்கு மற்றும் நோய் எதிர்ப்பு சிகிச்சைகளுக்காக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 106 கோடியே 17 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

...3

மருத்துவர்களுக்கு பயிற்சியும், நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து ஆதரவும் ரூ.2 கோடியே 77 இலட்சம் செலவில் அளிக்கப்படும். மேலும், தருமபுரி, விழுப்புரம், திருவண்ணாமலை, பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் 1.22 இலட்சம் பெண்களுக்கு ரூ.8 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில் HPV DNA பரிசோதனை மேற்கொள்ளப்படும். மொத்தம் ரூ.673 கோடியே 44 இலட்சம் மதிப்பீட்டில் புற்றுநோய் தாக்கத்திலிருந்து மக்களைக் காக்கும் வகையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்.

(iii) <u>மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாகனம், பராமரிப்பு செலவு, உதவியாளர் மற்றும் ஓட்டுநர் படிகள் குறித்து:–</u>

கடந்த 12–8–2026 அன்று காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. லெ.இ. ஜோதிமணி அவர்கள் சட்டமன்றப் பேரவையில் பேசும்போது, பல MLA–களிடம் சொந்தமாக வாகனம் இல்லை என்றும், தொகுதி பணிகளை ஆய்வு செய்யவும், பார்வையிடவும் கடினமாக உள்ளதாகவும், இலஞ்சம் இல்லாத நேர்மையான ஆட்சி அமைய உறுப்பினர்களின் அடிப்படைத் தேவைகளை அரசு பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். எந்தவொரு பொருளாதார வளம் இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்களாக பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் தங்களின் தொகுதி பணிகளைச் செய்ய சொந்த வாகனங்களோ அல்லது உதவியாளர்களையோ வைத்துக்கொள்ள முடிவதில்லை என்றும் தெரிவித்தார். மேலும், இதுதொடர்பாக கோரிக்கைகளும் வரப்பெற்றன. மக்களாட்சியின் மிக முக்கியத் தூண்களில் ஒன்றாக விளங்குபவர்கள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள். தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில் எளிய பின்னணியிலிருந்து பண பலமோ, அரசியல் பின்னணியோ இன்றி மக்களின் பேராதரவோடு முதன்முறையாக சட்டமன்றத்திற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள முதல் தலைமுறை சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. 29–3–2026 அன்று நடைபெற்ற தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் மக்கள் பணி செய்து, ஊழலற்ற, இலஞ்ச, இலாவண்யமற்ற நிர்வாகத்தை மேற்கொள்வது என அனைத்து வேட்பாளர்களும் எடுத்துக்கொண்ட உறுதிமொழிக்கேற்ப, அதே பாதையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

மக்களுக்கான நிர்வாகம்–நேர்மையின் பாதையில் என்ற அடிப்படையில் இலஞ்ச, இலாவண்யமற்ற நேர்மையான மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தை அடித்தட்டு மக்கள் வரை கொண்டு சேர்க்கும் நோக்கில் தமிழக வெற்றிக் கழக அரசு செயல்பட்டு வருகிறது. தங்களது தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டறியவும், அரசு திட்டங்கள் மக்களைச் சென்றடைவதை கண்காணிக்கவும், தங்களின் தொகுதி முழுவதும் தொடர் பயணங்களை சட்டமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பொருளாதார பலம் இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்களாக பணியாற்றும் மற்றும் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தங்களது மக்கள் பணியைத் தொய்வின்றி தொடர்வதற்கும், அவர்கள் தங்களின் தொகுதி பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கும் வசதியாக அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசு சார்பில் வாகனம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அறிவிப்பு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் பயணத் தேவைகளுக்காக பிறரைச் சார்ந்து இருப்பதைத் தடுத்து, அவர்கள் எவ்வித சமரசமுமின்றி சுதந்திரமாகவும், நேர்மையாகவும் தங்களின் தொகுதிக்கு உட்பட்ட கிராமப்புற மற்றும் தொலைதூர பகுதிகளுக்கு எளிதாக பயணம் செய்து, தொகுதி முழுவதும் உள்ள மக்களை நேரடியாக சந்தித்து, அவர்களின் குறைகளுக்கு தீர்வு காண வழிவகுக்கும். அதோடு மட்டுமின்றி, சட்டமன்ற உறுப்பினர்களின் பொருளாதார சுமையைக் குறைத்து, கடைக்கோடி மக்களுக்கு இலஞ்ச, இலாவண்யமற்ற நேர்மையான மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தை அளிக்கவும் உதவும். மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி சார்ந்த பல்வேறு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக சட்டமன்ற

...4

உறுப்பினர்கள் ஓர் உதவியாளரை நியமித்துக்கொள்வது அவசியம் எனக் கருதப்படுகிறது.

எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு வாங்கி, வழங்கும் வாகனத்தை பராமரிக்கும் விதமாக வாகனத்திற்கு ஓட்டுநர், எரிபொருள், வாகனப் பராமரிப்பு உள்ளிட்ட செலவினங்களுக்காக மாதந்தோறும் ரூ.75 ஆயிரம் வாகனப்படியாகவும், அலுவலக பணிகளில் உதவி செய்ய ஓர் உதவியாளரை நியமித்துக்கொள்ள மாதந்தோறும் ரூ.25 ஆயிரம் உதவியாளர் படியாகவும் வழங்கப்படும். இதற்காக உரிய சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொண்டு, ஆணைகள் வெளியிடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. லெ.இ. ஜோதிமணி, முனைவர் (திருமதி) தாரகை கத்பட், மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், திருமதி வா. சத்தியபாமா, மாண்புமிகு பால் மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறை அமைச்சர், முனைவர் அ. கணேஷ்குமார், திருமதி க. சிந்து, திரு. க. மாரிமுத்து, மாண்புமிகு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர், திரு. ஆர். செல்லசுவாமி, திரு. எஸ். காமராஜ், திரு. D. சண்முகன், திரு. அ. கல்லாணை, திரு. க. சபரி ஐங்கரன் மற்றும் மாண்புமிகு சமூக நீதித் துறை அமைச்சர் ஆகியோர் நன்றி தெரிவித்தார்கள்.

2. <u>2026–2027–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்</u>

2026–2027–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

**<u>கோரிக்கை எண்.40 – நீர்வளத் துறை</u>**

"நீர்வளத் துறை மானியக் கோரிகை எண்.40–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 5,006,75,57,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,247,62,24,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர் :–

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. பி.கே. சேகர்பாபு | 18. | முனைவர் பால் மனோஜ் பாண்டியன் |
| 2. | டாக்டர் வை. முத்துராஜா | 19. | திரு. எஸ். ஆஸ்டின் |
| 3. | திரு. ஐ.பி. செந்தில் குமார் | 20. | திரு. தி.மு. இராசேந்திரன் |
| 4. | திரு. எ.வ. வேலு | 21. | திரு. S. அம்பேத்குமார் |
| 5. | திரு. ஆர். வைத்திலிங்கம் | 22. | திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் |
| 6. | திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் | 23. | திரு. சூரியனூர் அ. சந்திரன் |
| 7. | திரு. G.V. மார்க்கண்டேயன் | 24. | திரு. க. கார்த்திகேயன் |
| 8. | முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 25. | திரு. மு. திராவிடமணி |
| 9. | டாக்டர் கலை கதிரவன் | 26. | முனைவர் சௌமியா அன்புமணி |
| 10. | திரு. ஈ. ராஜா | 27. | திரு. க. மாரிமுத்து |
| 11. | திரு. அ.செ. வில்வநாதன் | 28. | திரு. ஆ. குட்டி (எ) சுதாகர் |
| 12. | திரு. கா. கருணாநிதி | 29. | திரு. சி.வெ. கணேசன் |
| 13. | முனைவர் அ. கணேஷ்குமார் | 30. | திரு. அர. சக்கரபாணி |
| 14. | திரு. ச. சிவகுமார் | 31. | திரு. ஜி.ஆர். வசந்தவேல் |
| 15. | திரு. ட்டி. இராமச்சந்திரன் | 32. | திரு. துரை. சந்திரசேகரன் |
| 16. | முனைவர் கோவி. செழியன் | 33. | திரு. பூண்டி கே. கலைவாணன் |
| 17. | திரு. க. வைத்திலிங்கம் | 34. | திரு. சிவ. வீ. மெய்யநாதன் |

...5

| | | | |
|---|---|---|---|
| 35. | திருமதி த. லதா | 38. | திரு. பி.எஸ். சீனிவாசன் |
| 36. | திரு. கா. அண்ணாதுரை | 39. | திரு. ஆர். செல்லசுவாமி |
| 37. | திரு. நிவேதா எம். முருகன் | 40. | திரு. கே.கே. கதிரவன் |

**கோரிக்கை எண்.42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை எண்.42–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.33,970,32,57,000/–, மூலதனக் கணக்கில் ரூ.5,638,09,15,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர் :–

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. பி.கே. சேகர்பாபு | 21. | திரு. தி.மு. இராசேந்திரன் |
| 2. | டாக்டர் வை. முத்துராஜா | 22. | திரு. ரா. இளங்கோ |
| 3. | திரு. ஐ.பி. செந்தில் குமார் | 23. | திரு. S. அம்பேத்குமார் |
| 4. | திரு. எ.வ. வேலு | 24. | திரு. சூரியனூர் அ. சந்திரன் |
| 5. | திரு. ஆர். வைத்திலிங்கம் | 25. | திரு. க. கார்த்திகேயன் |
| 6. | திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் | 26. | திரு. மு. திராவிடமணி |
| 7. | திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் | 27. | முனைவர் சௌமியா அன்புமணி |
| 8. | திரு. G.V. மார்க்கண்டேயன் | 28. | திரு. க. மாரிமுத்து |
| 9. | முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 29. | திரு. ஆ. குட்டி (எ) சுதாகர் |
| 10. | டாக்டர் கலை கதிரவன் | 30. | திரு. ட்டி. இராமச்சந்திரன் |
| 11. | திரு. ஈ. ராஜா | 31. | திரு. சி.வெ. கணேசன் |
| 12. | திரு. அ.செ. வில்வநாதன் | 32. | திரு. அர. சக்கரபாணி |
| 13. | திரு. கா. கருணாநிதி | 33. | திரு. ஜி.ஆர். வசந்தவேல் |
| 14. | முனைவர் அ. கணேஷ்குமார் | 34. | திரு. துரை. சந்திரசேகரன் |
| 15. | திரு. ச. சிவகுமார் | 35. | திரு. நிவேதா எம். முருகன் |
| 16. | திரு. ஆர். செல்லசுவாமி | 36. | திரு. சிவ. வீ. மெய்யநாதன் |
| 17. | திருமதி த. லதா | 37. | திரு. பி.எஸ். சீனிவாசன் |
| 18. | திரு. க. வைத்திலிங்கம் | 38. | முனைவர் கோவி. செழியன் |
| 19. | முனைவர் பால் மனோஜ் பாண்டியன் | 39. | திரு. கே.கே. கதிரவன் |
| 20. | திரு. எஸ். ஆஸ்டின் | | |

**கோரிக்கை எண். 29 – சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு**
**(சுற்றுலா, பண்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை)**

"சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை) மானியக் கோரிக்கை எண்.29–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.375,43,37,000/–, மூலதனக் கணக்கில் ரூ.397,61,31,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர் :–

1. திரு. பி.கே. சேகர்பாபு
2. டாக்டர் வை. முத்துராஜா
3. திரு. ஐ.பி. செந்தில் குமார்
4. திரு. எ.வ. வேலு
5. திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்
6. திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்
7. திரு. G.V. மார்க்கண்டேயன்
8. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா
9. டாக்டர் கலை கதிரவன்
10. திரு. ஈ. ராஜா
11. திரு. அ.செ. வில்வநாதன்
12. முனைவர் அ. கணேஷ்குமார்
13. திரு. ச. சிவகுமார்
14. திரு. ட்டி. இராமச்சந்திரன்
15 திரு. க. வைத்திலிங்கம்
16. முனைவர் பால் மனோஜ் பாண்டியன்
17. திரு. எஸ். ஆஸ்டின்
18. திரு. தி.மு. இராசேந்திரன்
19. திரு. கா. கருணாநிதி
20. திரு. ரா. இளங்கோ
21. திரு. S. அம்பேத்குமார்
22. திரு. க. கார்த்திகேயன்
23. திரு. மு. திராவிடமணி
24. திரு. க. மாரிமுத்து
25. திரு. ஆ. குட்டி (எ) சுதாகர்
26. திரு. சி.வெ. கணேசன்
27. திரு. அர. சக்கரபாணி
28. திரு. துரை. சந்திரசேகரன்
29. திரு. பூண்டி கே. கலைவாணன்
30. திரு. கா. அண்ணாதுரை
31. திரு. நிவேதா எம். முருகன்
32. திரு. சிவ. வீ. மெய்யநாதன்
33. திரு. பி.எஸ். சீனிவாசன்
34. முனைவர் கோவி. செழியன்

மேற்காணும் மானியக் கோரிக்கைகள் மற்றும் வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதத்தில் கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்:–

1. திரு. இ. பெரியசாமி
2. திரு. ரெட்டியார்பட்டி வெ. நாராயணன்
3. திரு. கோ. வெங்கடாஜலம்
4. முனைவர் (திருமதி) சௌமியா அன்புமணி
5. திருமதி த. லதா
6. டாக்டர் M. சுதாகர்
7. திரு. துரை. சந்திரசேகரன்
8. திரு. S. சேகர்
9. திரு. ட்டி. இராமச்சந்திரன்
10. திரு. எஸ்.எம். சுகுமார்
11. டாக்டர் கலை கதிரவன்
12. திரு. பிஎல்ஏ. ஜெகநாத் மிஸ்ரா

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் ஆகியோர் பதிலுரை வழங்கினார்கள்.

<u>மானியக் கோரிக்கை எண்.40</u> – நீர்வளத் துறையின்மீது சட்டமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மேலும், நீர்வளத் துறையின்கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின்

முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

**மானியக் கோரிக்கை எண்.42** – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மீது சட்டமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் அரசுக்கு கோரிய தொகைகள் வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

**மானியக் கோரிக்கை எண்.29** – சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை) துறையின்மீது சட்டமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மேலும், சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை) துறையின்கீழ் அரசுக்கு கோரிய தொகைகள் வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

3. **பேரவைக்கு ஓர் அறிவிப்பு**

மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொள்ளும் சட்டமன்ற உறுப்பினர்கள் பிரதான கட்சிகளுக்கு மூன்று உறுப்பினர்கள் என்கிற அடிப்படையில் அனுமதி வழங்கப்படும் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கடைபிடிக்க வேண்டும்.

இதுவரை பேரவையில் உரை நிகழ்த்தாத சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கை மீது கருத்துக்களை தெரிவிப்பதற்கு ஒரு நிமிடத்திற்குள்ளாக உரை நிகழ்த்துவதற்கு அனுமதி வழங்கப்படும்.

சட்டமன்றப் பேரவை விதி 55–ன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் தொடர்பாக அமைச்சர்களிடம் பதில் வராத சிறப்பு கவன ஈர்ப்புகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாக பதிவு செய்ய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட அறிவிப்புகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

பேரவை பிற்பகல் 6.40 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் **2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20–ஆம் நாள் வியாழக்கிழமை** காலை 9.30 மணிக்குக் கூடும்.

**இரா. சாந்தி,**
**செயலாளர்.**